ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இலக்கம்: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/6 /1 சுற்றறிக்கை
இலக்கம்:பிஎஸ்/சிஎஸ்ஏ/சுற்றறிக்கை/31/2020

2020 ஒக்தோபர் மாதம் 05 ஆம் திகதி

**சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்**
**சகல இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்**
**சகல திணைக்களத் தலைவர்கள்**
**சகல அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைத் தலைவர்கள்**

**விடயங்கள் மற்றும் பணிகளை ஒதுக்குதல்**

அரசியலமைப்பின் 43 (1) மற்றும் 44 (2) பிரிவுகளுக்கு அமைவாக மற்றும் “சுபீட்சத்தின் நோக்கு" எனும் அரசாங்க கொள்கை அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமைச்சரவையின் சகல அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கான விடயங்கள் மற்றும் பணிகள் ஒதுக்கப்பட்டதன் பின்னர், குறிப்பிட்ட அமைச்சுடன் மேற்கொள்ளப்படும் அப்பணிகளை மேற்பார்வை செய்யும் செயல்பாடு முடிவுக்கு வருகின்றது.

அதற்கமைவாக,தொடர்புடையவர்த்தமானிஅறிவிப்பில் கூறப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் விடயஎல்லை, கடமைகள் மற்றும்பணிகள்போன்று குறிப்பிடத்தக்க முன்னுரிமைகள் தொடர்பாகவும், ஒவ்வொரு அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அவற்றுக்குரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன்,இது தொடர்பான விடயங்களை அமுல்படுத்துவதில் அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்கள் ஆகியவை இந்த அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளன.

மேலும்,அரசாங்கத்தின் மிக உயர்ந்த நிர்வாக மற்றும் நிர்வாக மட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் குறிக்கோள்களைச் சரியாக அடையாளம்கண்டு“சுபீட்சத்தின் நோக்கு" எனும் அரசாங்க கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மேற்போந்த அறிவிப்பின்மூலம் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை விடயத்துக்குப்பொறுப்பானஅமைச்சரின் கட்டளைகள் மற்றும் ஆலோசனைகளுக்கமைய உரிய சட்டரீதியான கட்டமைப்பிற்குள் செயல்படுத்துவது உங்கள் பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපැල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

மேற்போந்த விடயங்கள் மற்றும் கடமைகள் என்பன பொறுப்பளிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உரியவாறு புரிந்துகொண்டு, அமைச்சுக்களில் உள்ள இராஜாங்க அமைச்சுக்களைப்போன்று இடைஅமைச்சுக்களையும் ஒருங்கிணைத்துக்கொண்டு, அமைச்சுக்களின்செயலாளர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் செயல்பட வேண்டிய தேவையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மக்களை மையமாகக்கொண்ட அபிவிருத்தி மற்றும் நிர்வாக முறைமைக்கான "சுபீட்சத்தின் நோக்கு" எனும் அரசாங்க கொள்கைத் திட்டங்களை நிறைவேற்றுவது உங்கள் கடமையின் ஒரே குறிக்கோள் என்பதுடன், அதற்காக அனைத்து உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என்பதையும் வலியுறுத்துகிறேன். அதற்குத் தேவையான மனித மற்றும்பௌதீக வளங்களுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது அமைச்சரவை அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களின் கூட்டுப் பொறுப்பாகும்.

அதன்படி, ஏதாவதொரு இராஜாங்க அமைச்சுக்கு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் ஒதுக்கப்பட்ட விடயஎல்லைக்குள் கடமைகள், பணிகள் மற்றும் சிறப்பு முன்னுரிமைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைத் தவிர உரிய அமைச்சரவை அமைச்சுக்களின் சில பிரிவுகளின் நேரடி பங்களிப்பும் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் இருக்கலாம் என்பதோடு, அச் சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பணியாட்தொகுதியினர் மற்றும் ஏனைய பௌதீக வளங்களை இராஜாங்க அமைச்சின் பணிகளுக்காக வழங்க வேண்டியுள்ளது.

மேலும், சில நிறுவனங்கள் இராஜாங்க அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அமைச்சரவை அமைச்சின் செயலாளர், அந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை இராஜாங்க அமைச்சின் எல்லைக்குள் நிறைவேற்ற காலஅவகாசம் வழங்க வேண்டும்.மேலும், சேவைத் தேவையின் அடிப்படையில் பணிப்பொறுப்புக்களை மறுசீரமைத்தல் மற்றும் ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கைகளின் போது, ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்வதை முறைப்படுத்துவதற்குரிய ஆலோனைகளை வழங்குமாறு பொதுத் திறைச்சேரி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் இராஜாங்க அமைச்சுக்களின் பிரதம செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு சிறப்பு மேற்பார்வை பொறுப்புகள் வழங்கப்படுவதால், தங்கள் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் செயல்படும் பல்வேறு சேவை நிலையங்கள் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப செயல்படுவதை உறுதி செய்வதற்காக, அந்த நிறுவனங்கள் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட வேண்டும் என்பதோடு, அந்த சேவை நிலையங்களைத் தனிப்பட்ட முறையில் அல்லது கள ஆய்வுக்குட்படுத்தி, அந்த அலுவலகங்களிலும், கள மட்டத்திலும் உள்ள உத்தியோகத்தர்கள் திறமையாகச் சேவைகளை வழங்குகிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வாரத்திலும் பொது மக்கள் தினமன்று சகல உத்தியோகத்தர்களும் அலுவலகத்தில் தங்கிச் சேவைகளை வழங்க வேண்டும்என்பதுடன்,மேலும் அத் தினத்தில் வெளிப்புற கூட்டங்கள், விடுமுறையெடுத்தல் போன்றவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் உயர் நிர்வாக மற்றும் முகாமைத்துவ மட்டத்திலுள்ள நீங்கள் மேற்போந்த சூழ்நிலைகள் தொடர்பாகச் சரியான புரிதலும் கவனமும் கொண்டு, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் திறமையான உத்தியோகத்தரின் பங்கை ஆக்கபூர்வமாக ஆற்ற வேண்டியதன் அவசியத்தை அதிமேதகு சனாதிபதி அவர்கள் வலியுறுத்துகிறார் என்பதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான ஆலோசனைகளையும்வழிகாட்டுதலையும் இந்த அலுவலகத்தின் மூலம் வழங்குவதற்கான நிறுவன கட்டமைப்பும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தமது அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் கௌரவ அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் கட்டளைகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் உட்பட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்காகப் பயனுள்ள பணிகளில் ஈடுபடுமாறு அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆலோசனையின்படிஅறிவிக்கின்றேன்.

ஒப்பம்: **பி.பீ.ஜயசுந்தர**

சனாதிபதியின் செயலாளர்